# ★ 80,000 இலங்கையர் 4 வருடத்தில் கொலை!

(சென்னை)
இலங்கையில் 1987ம் ஆண்டுக்குப்பின் நாடுமுழுவதிலும் 60,000 முதல் 80,000 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக 'இந்தியா ருடே' தெரிவித்துள்ளது.
வடக்கு - கிழக்கில் சுமார் 10,000 பேர்வரை கொல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

உடனுதவும்
15-4-1991
யாழ்ப்ப

விலை ரூபா 4-50

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 83 சித்திரை 1 றம்ழான் 28 இதழ்: 63
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14 04-1991

## விமான தாக்குதல் தொடர்ந்து நடக்கும்

[கொழும்பு]
வடக்கு - கிழக்கில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் விமானத் தாக்குதல்கள் தொடருமென ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார் விமானத் தாக்குதல்கள்
[4-ம் பக்கம் பார்க்க]

## வவுனியா, மன்னாரில் விமானகுண்டுவீச்சு

[யாழ்ப்பாணம்]
மன்னாரில் கடந்த வியாழக்கிழமை 3 குண்டு வீச்சு விமானங்களும் ஒரு ஹெலிகாப்டரும் இணைந்து பலத்த குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளன.
இருலொறிகளில் சென்ற பொதுமக்கள் மீது நடாத்
[4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில்
# புதுவருட யுத்தநிறுத்தமில்லை
# படை நடவடிக்கை தொடரும்

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் புதுவருட தினத்தன்று (இன்று) யுத்தநிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என இராணுவ தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். வழமையான இராணுவ நடவடிக்கை தொடருமென்றும் அவர் கூறியுள்ளார்.

புதுவருடத்தைபொட்டி இப்பகுதியில் தற்காலிக யுத்த நிறுத்தமொன்றை அரசு அறிவிக்குமென எதிர்பார்க்கப்பட்டபோதும் அதற்கு இராணுவம் சம்மதிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது
மன்னார், வவுனியாவில் எவ்
(4-ம் பக்கம் பார்க்க)

## நாலு தமிழர் திருமலையில் கொலை

(திருமலை)
திருமலையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் வீடு ஒன்றை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததல் வீட்டில் தங்கியிருந்த நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் இறந்த நால்வரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது. [க]

## மட்டக்களப்பு மோதலில் 34 புலிகள் வீரமரணம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு, கரடியனாறு முகாமிலிருந்து கடந்த 9ம் திகதி வெளியேறிய இராணுவத்தை வழிமறித்து புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.
மியான்குளத்தில் நடந்த இம் மோதலில் புலிகள் தரப்பில் 22 போராளிகள் வீரமரணமடைந்தனர். மறுநாள் 10ம் திகதியும் இப்பகுதியில் பல மணிநேரம் மோதல் இடம்பெற்றது.
22 போராளிகளினதும் புகழுடல்களை எடுப்பதற்காக 10-ம் திகதி நடைபெற்ற மோதலில் 12 புலிகள் வீரமரணமடைந்தனர். படையினர் தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மோதல்

(வவனியா)
வவனியா பழையஊர், சூடுவைத்தபுலம், செட்டிகுளம், ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினர் கனரக வாகனங்கள் சகிதம் வெவ்வேறு பகுதிக்கு வந்தபோது விடுதலைப் புலிகள் இடைமறித்து கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதே
[4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவமுகாமிலிருந்துவலிகாமம்பகுதியைநோக்கி நேற்றுமுன்தினம் பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுத கடத்தலில் முக்கிய அரச புள்ளிகள்

[கொழும்பு]
அரசாங்க முக்கிய புள்ளிகள் பலர் 'ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
பல முக்கிய புள்ளிகள் உட்பட பலர் இந்த ஆயுதக் கடத்தலில் சம்பந்தப்பட்டு அவர்கள் மீது விசாரணைகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## முகாம்களிற்கு மின் வழங்க சுன்னாகம் மின்நிலையம் இயங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)
''பலாலி, காங்கேசன்துறை இராணுவ முகாம்களிலிருக்கும் பாரிய மின்சார ஜெனரேட்டர்களை இயங்கவைப்பதற்கு சுன்னாகம் மின்நிலையத்தினால்தான் முடியும்''
இவ்வாறு விசேட விமானத்தில் கொழும்பிலிருந்து அழைத்துவரப்பட்ட மின்சாரப் பொறியியலாளர் திரு. சர்மா தெரிவித்தார்.
பலாலி, காங்கேசன்துறை இராணுவ முகாம்களுக்கு தற்போது போதிய மின்வெளிச்சம் இன்மையால் இரவு நேரங்களில் இராணுவத்தினர் மிகவும் பீதியின் மத்தியில் இருப்பதால் காங்கேசன்துறையில் இருக்கும் ''28 மெகவாட்'' டுகளைக்கொண்ட இரு பாரிய ஜெனரேட்டர்களை திருத்தம் செய்யமுடியுமா என்பதை பார்த்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி திரு. சர்மாவுக்கு முப்படைத் தலைமையகம்
(4 ம் பக்கம் பார்க்க]

## வடபகுதியில் புதிய முறையில் கடற்படை ரகசிய ரோந்து

(புங்குடுதீவு)
வடபகுதி கடலில் விசைப் படகுகளில் செல்லும் கடற்படையினர் இரவு நேரங்களில் படகு யெந்திரத்தை நிறுத்தி விட்டு சில மைல் தூரங்களுக்கு ரோந்து செய்துவருகின்றனர்.
இந்த இரகசிய ரோந்தினால் கடற்றொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருவதுடன் அவர்களிடமிருக்கும் மீன்பிடி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது
(4-ம் பக்கம் பார்க்க)

## 'இன்ரபோல்' உதவிக்கு இலங்கை மறுப்பு

[கொழும்பு)
அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் கொலை குறித்து விசாரணைகளுக்கு உதவ 'இன்ரபோல்' பொலிஸார் முன் வந்தபோதும் அதனை இலங்கை தரப்பு ஏற்க மறுத்து விட்டதாம்.
முதலில் அமைச்சரின்
[4-ம் பக்கம் பார்க்க]

## 487 படையினரை யுத்தமுனையில் காணவில்லை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தில் இதுவரை
(4-ம் பக்கம் பார்க்க,

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

வாசகர்கள்,
வாடிக்கையாளர்கள்
வர்த்தகப் பெருமக்கள்
அபிமானிகள் அனைவருக்கும் எமது இனிய
புத்தாண்டு
வாழ்த்துக்கள்.

நிர்வாகி.

# வரி விளம்பரம்

### உருவச்சிலைகள்

வெண்கல உருவச்சிலைகள் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு: சிற்பி P. சிங்கம், 13, கோவில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (சி 4627)

### தேவை

சமூகசேவை நிறுவனத்தில் தங்கி பணி செய்யும் ஆவல் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் தேவை. உணவு இருப்பிட வசதியுடன் ஊக்குவிப்பு உதவிப்பணமும் வழங்கப்படும். 20-04-91க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4625 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(சி 4625)

### விலங்கியல் வகுப்பு

G. C. E. (A/L) 91, 92, மீள் வகுப்புகளுக்கான விலங்கியல் பாடம் அனுபவம் வாய்ந்த பட்டதாரி கல்லூரி ஆசிரியரினால் தனிப்பிட்ட முறையில் கற்பித்துக்கொடுக்கப்படும். தொடர்பு: 63. பொற்பதி வீதி, கொக்குவில்,
(சி 4523)

### பாலாஜி புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாக குண்டம், ஆறுகால்மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-4634)

### ராகு கேது மாற்றம்

13-4-91ல் ராகுகேது மாற்றமும் புத்தாண்டுப் பலன்களும் ரூ.6/-எங்கும்கிடைக்கும். ராகு கேது மாற்றத்தின் பின்னும் செவ்வாயின் கெட்ட பார்வையால் யுத்தம் தொடரும். Prof. சத்தியதாஸன் ஞானம்ஸ், சித்தன்கேணி சந்தி
[சி-4639]

### வாசகர் கருத்தரங்கு

மீரா வெளியீடாக வெளிவந்துள்ள நாவல்களில் நீங்கள் ரசித்துப் படித்த நாவல்களின் விமர்சனங்களை, கருத்துக்களை எழுதுங்கள். புதியதாக வெளிவரும் மீரா வெளியீடுகளில் பிரசுரிக்கப்படும். விரைவில் சிதம்பரம் திருச்செந்திநாதன் எழுதிய ''முள்முடி மன்னர்கள்.'' (சி 4636)

### அப்பாள் திருமண சேவை

Lecturers, Engineers மணமக்களின் ஜாதகக் குறிப்புக்கள் இருக்கின்றன. இவர்களுக்கு அழகிய, படித்த மணப் பெண்கள் தேவை சின்னச்சாமிக் குருக்கள் - சண்முகம். வீரமாகாளி அம்மன் கோவிலடி. 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (4641)

## போட்டிகள்

[கொக்குவில்]

புதுவருடத்தை யொட்டி கரபந்தாட்டம், விநோத உடை, பொது அறிவு ஆகிய போட்டிகளை நடத்த கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினர் ஒழுங்குசெய்துள்ளனர்.
(135)


பிரசோற்பத்தி புத்தாண்டில்
எண்ணிய எண்ணியவாறு எய்தி
எல்லோரும் இன்பமாய் வாழ
இறை ஆசி வேண்டுகிறது

—மில்க்வைற்

அனைத்து அழுக்குப்போக்கி
புதிய அதிசக்தி வாய்ந்த

## திரவ சவர்க்காரம்

எங்கும் விற்பனையாகிறது

| | |
|---|---|
| 1/2 போத்தல் | ரூ. 45-00 |
| முழுப்போத்தல் | ரூ. 85-00 |

10 போத்தல்களும் மேலாகவும் வாங்குவோர்க்கு போத்தலுக்கு ரூ. 5-00 விசேட கழிவு.

## "மில்க்வைற்"

(எ-1224)



நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த

## புத்தாண்டு நல்வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் வாழ்க்கை வளம்பெற
நல்லதோர் வழிகாட்டி

## "ஷப்ரு"

நிதித்துறையில்
நேசக்கரம் நீட்டும் நண்பன்

புதுவருடத்தை முன்னிட்டு எமது பணிமனையில் பணம்கொடுக்கல் - வாங்கல்கள் நாளை திங்கட்கிழமை (15-04-1991) வரும் சுபவேளையில் காலை 9-15 மணி முதல் 9-45 மணிவரை நடைபெறும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம்

207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[எ-1225]


கரபந்தாட்டம்

## இலங்கையின் தேசிய விளையாட்டு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய விளையாட்டாக கரபந்தாட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகள் மாநாட்டில் விளையாட்டமைச்சின் சிபார்சினை ஏற்று, கரபந்தாட்டத்தை இலங்கையின் தேசிய விளையாட்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. (வி)

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை குடும்பநல சுகாதாரச் செயற்குழு நிர்வாகிகள் விபரம்;

தலைவர்: வீரசிங்கம் தங்கவேல், செயலாளர்: கார்த்திகேசு ஜீவஸ்காந்தன், பொருளாளர்: செல்வி கதிரிப்பிள்ளை விஜயாதேவி.

அமைப்புக் குழு உறுப்பினர்களாக ந. சுப்பிரமணியம், இ. செல்வரத்தினம், செல்விகள் சி. தவமணி, சி. விக்கினேஸ்வரி, செல்வன் மு. ஆதித்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## பரிதாப மரணம்

(மாங்குளம்)

சீவல் தொழிலாளி பனையிலிருந்து தவறி விழுந்ததால் மூளை சிதறி பரிதாப நிலையில் மரணமானார்.

கள் இறக்கச்சென்ற அல்வாயைச்சேர்ந்த சீவல் தொழிலாளி தெய்வேந்திரம் [வயது 50] பனையின் ஓலையைப்பிடித்த வேளையில் ஓலை கழன்றதால் நிலத்தில் விழுந்து இறந்ததாக சொல்லப்படுகிறது.
(150)

## இராசி பலன்

14-04-1991
ஞாயிற்றுக்கிழமை

ரேவதி ந.இ: 12-30 வரை. அமாவாசை பி. இ. 1-50 வரை.

அமாவாசை விரதம்,

இராகு காலம் மாலை 4-35 முதல் 6-05 வரை.

சுபநேரம் காலை 9-05 முதல் 10-35வரை.

விஷு புண்ணிய காலம் மு.ப. 11-22 வரை.

மேஷம்- புதிய சிந்தனை, தெய்வ தரிசனம், தானதர்மம், பாராட்டு.

இடபம்- அறிஞர் சந்திப்பு, குடும்பசுகம், விருந்துபசாரம்.

மிதுனம்- மனமகிழ்ச்சி, இனசன உறவு, சென்ற இடத்தில் சிறப்பு.

கடகம்- தெய்வீக செலவு, விடா முயற்சி, புத்திரர் செலவு.

சிங்கம்- துன்பம் அகலும், பணவரவு. காரியதாமதம்.

கன்னி- பகைவர் உறவு, கற்பனைமிகுதி, அந்நிய வாசம்.

துலாம்-ஞானிகள் தரிசனம், தொழில் சிறப்பு. மாமனார் உதவி

விருச்சிகம்- பண வரவு, குடும்ப உல்லாசம், கடமையுணர்வு.

தனுசு- தற்பெருமை, வீட்டில் சுபகாரியம், அதிக யோசனை.

மகரம்- தூரத்து செய்தி, பணியாள் சகாயம், வாக்கு வன்மை.

கும்பம்- குடும்ப சுகம், புதிய உறவு, தொழில் மகிழ்ச்சி, புகழ்.

மீனம்- வரவு அதிகரித்தல். நண்பர் உதவி, நற்புகழ்ச்சி.

— ஜோஸ்யர்வன் தெரிவித்தார்.

## கவஸ்கார் காலமானார் இந்தியாவை கலக்கிய வதந்தி

(புதுடில்லி)

உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் சுனில் கவஸ்கார் மாரடைப்பால் காலமானார் என்ற வதந்தி அண்மையில் இந்தியாவில் காட்டுத் தீபோல் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது;

எங்கோ வெளியில் சென்றிருந்த கவஸ்காரும், விஷயமறிந்து உடனடியாக வீடு திரும்பியிருக்கிறார்; ஆயிரக்கணக்கானோர் தொலைபேசிமூலமும், நேரிலும் கவஸ்காரின் உடல்நிலை பற்றி விசாரித்துள்ளார்கள்;

சில விஷமிகள் கிளப்பிவிட்ட வதந்தியென பின் அறியப்பட்டதாம். (சி)

## நாட்டில் சமாதானம் நிலவ பிரார்த்திப்போம்

(கொழும்பு)

சிங்கள-தமிழ் புத்தாண்டில் நாட்டில் சமாதானம் நிலவப் பிரார்த்திப்போம் என்று ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்துள்ள புத்தாண்டுச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன்று பிறக்கும் தமிழ்-சிங்களப் புத்தாண்டில் இலங்கைத் தாய்த்திருநாட்டிற்கு விரைவில் சமாதானம் உதயமாக வேண்டும் எனப் பிரார்த்திப்போம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தப் புத்தாண்டில் சகல மக்கள் மத்தியிலும் சமரச இணக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளும் நல்ல ஆண்டாகப் பயன்படுத்திக் கொள்வோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

## காப்புறுதித் திட்டத்தில் இணையுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் ஊழியர்கள் அனைவரையும் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அரசு அறிவித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையிலும், அதனை அண்டியுள்ள மற்றைய வைத்தியசாலைகளிலும் பணிபுரியும் சகல ஊழியர்களையும் உடனடியாகக் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி அரசாங்கம் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் ஒரு ஊழியர் மாதமொன்றுக்கு 20 ரூபா வீதம் காப்புறுதித் திட்டத்திற்குச் செலுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (வி)

## பத்து மாதம் சம்பளமின்றி கடமையாற்றும் ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் சுமார் பத்து மாத காலமாக தொண்டர்களாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு எதுவித அலவன்சும் வழங்கப்படவில்லை.

சம்பளமற்ற நிலையிலும் ஆண் பெண் உட்பட 35 தொண்டர்கள் நோயாளர் நலன் கருதி இச்சேவையை மேற்கொண்டுவருகின்றனர். (56)

## புங்குடுதீவில் மலசலகூடம் அமைக்க நடவடிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள மக்களின் சுகாதாரவசதிகருதி மலசலகூடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் சுகாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் மலசலகூடம் இல்லாத வீடுகளின் விபரம் திரட்டப்பட்டு வருகிறது. (101)

## கிறிஸ்தவ குடும்பங்களுக்கு திருச்சபை நிவாரணம்

(உடுவில்)

தென்னிந்தியத் திருச்சபையின் ஆதரவில் கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு கனேடிய உதவியுடன் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

500 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி, 3 கிலோ மா, 2 கிலோ சீனி, ஒரு கிலோ பயறு ஆகியன வழங்கப்பட்டன

சபையின் திட்டப் பொறுப்பாளர் திரு. ஜி. இராசநாயகத்தின் மேற்பார்வையில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா மதிப்புள்ள உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன; (109)

'மேஜர் டயஸ்'

## மென்பந்து கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 7 பேர் பங்கு பற்றும் 12 ஓவர்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டி ஒன்றை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினர் நடாத்தவுள்ளனர்.

''மேஜர் டயஸ் கந்தசாமி'' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடாத்தப்படவுள்ள மேற்படி போட்டியில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் கலந்துகொள்ளலாம்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் இம்மாதம் 17ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு ஈச்சமோட்டை சனசமூகநிலையக் காரியதரிசி திரு ச. தவச்செல்வன் தெரிவித்தார். (வி)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஐந்து வருடமாக சேவையாற்றி அண்மையில் இளைப்பாறிய ம. நல்லைநாதனுக்கு வைத்தியசாலை சுகாதார சேவை நலன்புரிச் சங்கத்தினால் சேவை நலம் பாராட்டுவிழா அண்மையில் நடத்தப்பட்டது.

# பிரஜாபதி வருஷத்தை வரவேற்போம்

புத்தாண்டு பிறப்பு எல்லா இன மக்களாலும் விரும்பிக் கொண்டாடப்பட்டு வரும் பெரு விழாவாகும். இதனை இந்துக்களோடு தொடர்புபடுத்திக் காட்டப்பட்டாலும், அனைவருக்கும், புத்தாண்டு பிறப்பதும், அதனை மகிழ்ச்சியோடு வரவேற்பதும், வழமையான நிகழ்வாகவேயுள்ளது. புத்தாண்டன்று சகல இன மக்களும் தமது குடும்பத்தோடு சேர்ந்து புத்தாடை அணிந்து, சுற்றம் தழுவி விருந்துண்டு, ஆடல் பாடல் என்பனவற்றில் பங்குகொண்டு அன்றைய நாளைக் களிப்பதுண்டு.

சித்திரைப் புத்தாண்டு என்பது தமிழ் மக்களின் வானியல் கலையின் மகத்தான சாதனைகளை புலப்படுத்தும் நிகழ்வாகும். பூமி சூரியனைச் சுற்றி வருகின்ற பாதை 'பூவீதி'' என அழைக்கப்படுகிறது. ஆனால் பூவுலகில் வசிக்கின்ற மக்களுக்கு சூரியனே ஆகாய வீதியில் உலாவருவதாக தோன்றுகிறது. இதனை இராசிச்சக்கர வீதி, என அழைக்கலாம், இந்த ராசி சக்கர வீதி மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என பன்னிரெண்டு இராசிகளாக பிரித்துள்ளனர் முன்னோர்கள். ஒவ்வொரு இராசியும் முப்பது பாகை கொண்டது. சூரியன் ஒவ்வோர் இராசியிலும் சஞ்சரிக்கும் காலம் ஒவ்வொரு மாதமாகும்.

சூரியன் மீன இராசியைக் கடந்து முதலாவது இராசியான மேட இராசியில் பிரவேசிக்கும் நாளே சித்திரைப் புத்தாண்டாகும்.

இந்நாளில் இராப்பகல் சமமாய் இருப்பதால், விசு புண்ணிய தினம் எனக் கருதப்படுகிறது. வானியல் கலையில் ஆரம்பகாலம் முதல் தமிழர்களே முதன்மை மிக்கவர்களாக இருந்தமையால் மேட இராசியை முதலாக வைத்து வருடத்தைக் கணிக்க தொடங்கினர்கள். மேலை நாட்டவர் அனுசரிக்கும் ''இறகோரியன்'' நாள்காட்டி ஆக்கப்படுவதற்கு முன்னர், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், தமிழ்மக்கள் ராசிவட்டத்தைக் கொண்டு வருடத்தைக் கணித்தனர்.

பிரபவ முதல் சவுய என்னும் ஆண்டுவரையுள்ள அறுபது ஆண்டுகளைக் கொண்ட ஆண்டுச் சக்கரமானது மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. இவ்வாண்டு பிரஜாபதி வருஷமாகும்

புத்தாண்டு இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி காலை ஏழு இருபத்திரண்டுக்கும் திருக்கணித பஞ்சாங்கப்படி காலை பத்து மணி நான்கு நிமிடத்துக்கும் பிறப்பதாக தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு பிறக்கும் புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்கபூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் இலவமிலையும், காலில் விளாவிலையும் வைத்து ஸ்நானம் செய்து சிவப்பு நிறமுள்ள பட்டு வஸ்திரமாயினும், அல்லது சிவப்புக் கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து மாணிக்கம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களை அணிந்து, தெய்வ வழிபாடு செய்து புத்தாண்டை கொண்டாடுமாறு பஞ்சாங்கங்கள் தெரிவித்துள்ளன.

பிறந்துள்ள புத்தாண்டு, மேஷம், சிங்கம், விருச்சிகம், மீன இராசியினருக்கு அதிசிறப்பான பலனையும், இடபம், மிதுனம், கடகம், துலாம், கும்ப இராசியினருக்கு மத்திம பலனையும், மற்றைய இராசியினருக்கு கஷ்ட பலனையும் தரலாம்.

ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், 1ம் கால், கேட்டை, பூரட்டாதி 4ம் கால், உத்திரட்டாதி ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தோஸமாவதால் தெய்வ வழிபாடு செய்தல் நலம் பயக்கும்.

**- ஜோஸ்யர் -**

## வேண்டிடும் வரத்தை ஈய்ந்து...

நெருப்பென எரியும் நாடு
நீறென வேகும் உடல்கள்
தெருக்களில் நதியாய் ரத்தம்
சிதைந்திட்ட மாடம் என்று
உருத் தெரியாத கோலம்
ஓ... அதுபோதும் போதும்
இனித் தமிழ்மக்கள் தமிழ்
ஈழத்தில் வாழும் வழிதா!

ஆண்டொன்று மலரும் போது
அழுகைகள் துயரம் எல்லாம்
மாண்டிடும் இனிமேல் வாழ்வு
மலர்ந்திடும் என்று நம்பி
நீண்டநற் கனவு காணும்
நிம்மதி குலைந்த மக்கள்
வேண்டிடும் வரத்தை ஈய்ந்து
விடிவுதா புதிய ஆண்டே!

நெடுந்தீவு -- லக்ஸ்மன்

## குடும்பஸ்தர் காயம்

[யாழ்ப்பாணம்]

இரவுநேரத்தில் மறைந்திருந்து நடத்தப்பட்ட தாக்குதலினல் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கைதடி மேற்கில் வசிக்கும் கந்தன் வாரித்தம்பி (47-வயது) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மதுபோதையிலிருந்த அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (56)

## ஆனைமுகன் தேர்ப் பவனி

மேஷத்தில் ஏறுதற்கு மேல் விளங்கு
சூர்யனும் விழைந்திடும் நாள்
பூஜிக்கும் புது வருடப் பிறப்பன்று
பஞ்சமுகன் பொலியும் தெய்வத்
தேசுமிகு தேரின் மிசை ஏறிடுவான்
தேவரொடு பூதர் சூழ
ஆசி பெறும் அடியவர்கள் சூழவரும்
ஆனைமுகன் பவனி காண்பார்.

கவிஞர் -- அம்பிகைதாசன்

[இன்று யாழ். அத்தியடி பிள்ளையார் தேர்த்திருவிழா]

# மே 6ம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் அடுத்த தவணைக்காக மே மாதம் 6ம் திகதி திறக்கப்படும்.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

''கல்விப் பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சை நடக்கும் பாடசாலைகள் தொடங்கும் தொகுதியில் மாற்றங்கள் ஏற்படும். அதிபர்கள் பாடசாலைகளை முந்தித் தொடங்குவதாக இருந்தால் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்று பாடசாலைகளை ஆரம்பிக்கலாம்'' என்றார். (152)

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொய்யாத்தோட்டம் ஞான செல்வ விநாயகராலய இந்து இளைஞர் மன்றத்தினல் வருடாவருடம் ஆலய மண்டபத்தில் நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டியும் பரிசு வழங்கும் நிகழ்ச்சியும் இன்று நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு பரிசுகள் வழங்குவார்.

# தமிழ்நாடு திரை அரங்குகள் நேற்றுமுதல் மூடப்பட்டன

(சென்னை)

தமிழ்நாட்டில் திரையரங்குகள் யாவும் நேற்றுமுதல் காலவரையின்றி மூடப்பட்டுள்ளன.

திரைப்பட அரங்குகளை மேற்பார்வையிட கண்காணிப்புக் குழு அமைப்பதென திரைப்பட விநியோகஸ்தர்கள் ஒருதரப்பாக முடிவு செய்ததை ஆட்சேபித்து திரைப்பட அரங்குகளின் உரிமையாளர் சங்கம் திரையரங்குகள் யாவையும் மூடுவதென முடிவு செய்துள்ளது.

90 சதவீதமான அரங்குகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன.

தமிழ்நாட்டில் சுமார் 2 ஆயிரத்து 450 திரையரங்குகள் உள்ளன. 25 ஆயிரம் தொழிலாளர்கள் திரையரங்குகளில் பணிபுரிகின்றனர். (பூ)

# தமிழ்நாடு தேர்தல் களம்

## எந்தக் கட்சியோடும் கூட்டு இல்லை

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் தி. மு. க., அ. இ. அ. தி. மு. க., காங்கிரஸ் எந்தக் கட்சியோடும் கூட்டுக் கிடையாது என்று பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்துள்ளது. என்றாலும் பாட்டாளி மக்கள் கட்சியைத் தங்கள் அணியில் சேர்க்கச் சென்னையிலிருந்து திண்டிவனத்தில் உள்ள ராமதாஸ் வீட்டுக்குத் தொடர்ந்து பலர் சென்றவண்ணம் உள்ளனர்.

## 'அனைத்திந்திய'

'அனைத்திந்திய' என்ற சொல்லில் ஒரு குற்றம் இருப்பதாக கோவையில் நடந்த கூட்டமொன்றில் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறினார்.

ஒரு பாடசாலை விழாவுக்கு 7ம் வகுப்பு, 8ம் வகுப்பு மாணவர்கள் வந்தார்களா? என்று கேட்டால் அனைத்து மாணவர்களும் வந்தார்கள் என்று சொல்வார்கள். எனவே 'அனைத்திந்திய' என்று சொன்னால் ஏதோ ஏழெட்டு இந்தியா இருப்பதுபோல் பொருள்படுகிறது. எனவேதான் சென்னையில் நடந்த அனைத்திந்திய சுற்றுலாப் பொருட்காட்சி விழாவில் தான் இந்த விஷயத்தைச் சொன்னதும் 'இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி' என்று மாற்றிவிட்டார்கள் என்றார்.

## பிச்சைக்காரராக்கி...

''தி. மு. க ஆட்சியில் ஆசிரியர், மாணவர், பொலிஸ் வழக்கறிஞர் என்று எல்லாத் தரப்பினரும் போராட்டம் நடத்திவிட்டார்கள். பிச்சைக்காரர்கள் தான் போராட்டம் நடத்தவில்லை.''

சென்னை தியாகராஜ நகரில் திரு. கே. கிருஷ்ணசாமி தலைமையில் நடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் பேசிய வண்ணை அனுராதா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: கலைஞர் கருணாநிதி இன்னும் சில நாள் ஆட்சியில் இருந்திருந்தால் நம் எல்லோரையும் பிச்சைக்காரராக்கி, நம்மைப் போராட்டம் நடத்தும் நிலைக்கு ஆளாக்கியிருப்பார்.

வளர்மதி பேசும்போது: புரட்சித் தலைவராவது சில சமயம் போனால் போகிறது விட்டுவிடுவோம் என்ற ரீதியில் மன்னித்துவிட்டுப் போய்விடுவார் ஆனால் எங்க ஜெயலலிதா அம்மா 'ஆங்காரக் காளி', 'அங்கள பரமேஸ்வரி' அவரிடம் யாரும் தப்பிவிடமுடியாது என்றார்.

# கப்பலில் வந்த துருக்கியர்கள் கொழும்பு நகரில் தஞ்சம்!

(கொழும்பு)

திசை மாறிய கப்பலில் அனுதரவான நிலையில் வந்த 167 துருக்கிப் பிரஜைகள் கொழும்பில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

துருக்கியிலிருந்து அண்மையில் கடற்பயணத்தை ஆரம்பித்த இந்த 167 துருக்கி முஸ்லிம்களும் அனுதரவான நிலையில் பல இடங்களில் அலைந்து திரிந்து இறுதியில் கொழும்பு வந்தடைந்தனர்.

இந்தத் துருக்கி அகதிகளுக்கு மருதானை சாஹிராக் கல்லூரி விடுதிகளில் தங்குவதற்கான வசதிகள் தற்போது செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (ரி)

# 43 இராணுவ தளங்களை மூடிவிட அமெரிக்கா முடிவு

(வாஷிங்டன்)

அமெரிக்கா. வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உள்ள தனது 43 பெரிய இராணுவத் தளங்களை மூடிவிடுவதென முடிவு செய்துள்ளது

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு டெக்செனி நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் அமைச்சர் மேலும் பேசுகையில்: 20 லட்சம் வீரர்களைக் கொண்ட தமது வலுவான ஆயுதப் படையை 5 லட்சம் வீரர்களாக எதிர்வரும் ஆறு வருடங்களில் அமெரிக்கா மாற்றியமைக்க இருப்பதாகவும், இராணுவத் தளங்களை மூடிவிடுவது சம்பந்தமான விரிவான பட்டியல் ஒன்றை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு, நேற்றுப் பாராளுமன்றில் சமர்ப்பித்தது.

ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளிலுள்ள 32 அமெரிக்கத் தளங்களை மூடிவிடுவது அல்லது குறைத்துக்கொள்வது என்றும் அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

அடுத்த சில ஆண்டுகளில் வெளிநாடுகளில் அமெரிக்கா வைத்திருக்கும் 150க்கும் மேற்பட்ட இராணுவத் தளங்களை மூடிவிடுவது அல்லது குறைத்துக்கொள்வது என்று அமெரிக்கா முன்னமே யோசனை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

★ இலங்கையுள் நிகழ்வுகள்

# யுத்தம் தொடரும், அரசு வீழும் சிங்கள பேராசிரியர் ஆருடம்

(கொழும்பு)

இலங்கையில் இவ்வருடத்தில் நடக்கப்போவதாகக் கூறும் பல முக்கிய நிகழ்வுகள் குறித்து சிங்கள பேராசிரியர் ஒருவர் ஆருடம் தெரிவித்துள்ளார்

இவரது ஆருடப்படி, இவ்வருடம் யூலை மாதத்தின்பின் நடக்கும் பொதுத்தேர்தலில் ஆட்சிமாறும், ஐ. தே. கட்சியின் மிக முக்கிய தலைவர் ஒருவர் இயற்கையாக மரணமாவார்; டிசம்பர் மாதத்துக்கு முன் மிகப் பாரதூரமான ரயில் அல்லது விமான விபத்து ஒன்று ஏற்படும். அதில் பெருமளவு மக்கள் கொல்லப்படுவர். இதன்மூலம் இலங்கையை உலகில் பெருமளவு டக்களுக்குத் தெரியவரும்.

மேலும் வடக்கு - கிழக்கு யுத்தம் ஆகஸ்ட் மாதம்வரை தொடரும் என்றும், முக்கிய இராணுவத் தளபதி ஒருவர் குண்டுவெடிப்பால் கொல்லப்படுவார் என்றும் கூறியுள்ளார்.

சிங்களப் பேராசிரியரான திரு. நந்தசேன ஏற்கனவே வளைகுடா யுத்தத்தில் அமெரிக்கா வெல்லும் என்றும், இதன்மூலம் சதாம் ஹுசைன் அவமானப்படுவாரென்றும், 1991 முற்பகுதியில் அரசு அமைச்சர் ஒருவர் அகால மரணமாவாரென்றும் வேறு பலவும்கூறியிருந்ததும் அவைநடைபெற்றதும்குறிப்பிடத்தக்கது. (சி)

## ‘விக்ஸ் அக்சன் - 500’ மருந்துக்கு தடை?

[கொழும்பு]

சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய மூலிகைகள் ‘‘விக்ஸ் அக்சன் 500’’ என்னும் மருந்தில் இருப்பதனால் அதை தகுந்த மருத்துவர் ஆலோசனையின்றி பாவிக்க வேண்டாமென சுகாதார அமைச்சு பொதுமக்களை வேண்டியுள்ளது.

தற்போது சாதாரணமாக மருந்துக் கடைகளில் பெறக்கூடியதாக இருக்கும் இம்மருந்தை பாவனைக்கு விட வேண்டாமெனவும் அதைப் பற்றி பத்திரிகைகள், றேடியோ போன்றவைகளில் விளம்பரம் செய்யக்கூடாதெனவும் அதைவிநியோகம் செய்யும் ஸ்தாபனத்திற்கு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. [பூ]

## முக்கிய தலைவர்கள் ராஜினமா

(புதுடில்லி)

வி. பி. சிங்கின் ஜனதா தள் கட்சியிலிருந்து அருண்நேரு, அரிப்முகமட்கான், சத்வால் மாலிவ் உட்பட எட்டு முக்கிய தலைவர்கள் தமது பதவிகளை இராஜினமா செய்துள்ளார்கள்.

மேற்படி தலைவர்களின் ராஜினமாவால் வி. பி சிங்கின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படையலாம் என அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (க)

## 487 படையினரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

487 படையினர் காணமல் போயுள்ளதாக ஏயர் வைஸ் மார்ஷல்' வோல்டர் பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்

ஏப்ரல் வரை 1108 படையினர் கொல்லப்பட்டும் 2,427 படையினர் காயமுற்றும் இவர்களில் 1,125 பேர் படுகாயமுற்று தொடர்ந்தும் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவதாகவும் கூறினர்.

இம் மோதல்களில் 2000 படையினர் வரை கொல்லப்பட்டிருக்கலாமென ஏஜென்ஸி தகவல்கள் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

★ வடக்கு - கிழக்கில்

# பரீட்சை நிலையங்கள் மேல் விஷேட கொடி பறக்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் எதிர் வரும் 23 ம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. உயர்தர பரீட்சை நடைபெறும் நிலையங்கள்மீது விஷேட கொடிகள் பறக்கவிடப்படவுள்ளது.

இப்பரீட்சை நிலையங்கள் தாக்குதல் தவிர்ப்பு பகுதியாக கருதப்படுவதால் இவ்விஷேட கொடி பறக்கவிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனினும் இதுஒரு யுத்த நிறுத்தமல்ல என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளளார். (சி)

## வடபகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேகமாக வரும் கடற்படை படகின் இயந்திரங்களின் இரைச்சல் நிறுத்தப்பட்ட நிலையில் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் படகுகளிலிருந்து குடிமக்கள்வாழும் இருப்பிடங்களை நோக்கி பீரங்கித் தாக்குதல், துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இரவு நேரங்களில் சத்தமின்றி நிறுத்தப்பட்டிருக்கும் இப்படகுகளிருந்து திடீர் திடீரென 'பரா' வெளிச்சங்கள் விடப்பட்டு தீவிர கண்காணிப்பும் செய்யப்பட்டு வருகிறது

நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினதீவு உட்பட தீவுப்பகுதி கடற்பகுதியில் அதிவேகநவீனரக விசைபடகுகள், மற்றும் கடற்கப்பல்களின் நடமாட்டம் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகிறது. (101)

## ஆயுத கடத்தலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெல்ஜியம் கப்பலான மதலினுவில் ஆயுதங்கள் வந்தது பற்றிய விசாரணைக்கு 'இன்ரபோல்' பொலிஸாரின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகூறினர். [சி]

## 80,000 இலங்கையர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்பகுதி கொலைகளுக்கு காலம் சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன ஒருவிதத்தில் காரணமாயிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. [சி]

## இன்ரபோல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைக்கு உதவுமாறு 'இன்ரபோல்' பொலிஸாரிடம் கோரப்பட்டதாகவும் தற்போது அது மறுக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளே இக்கொலையை செய்தார்கள் எனக்கூறி அந்த 'பைலை' அரசுமூடி விட்டதாகவும் தற்போது கூறப்படுகிறது

## மானமுள்ள தமிழன் விடுதலைப் புலிகளே

(சென்னை)

‘தமிழனை கொன்று குவிப்பது தான் தேசபக்தி என்றால் அந்த தேசபக்தி எங்களுக்கு தேவையில்லை; மானமுள்ள தமிழர் எல்லாம் விடுதலைப் புலிகளே.’’

இவ்வாறு திரு. வை. கோபாலசாமி அண்மையில் நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினர்

அங்கு அவர் மேலும் பேசுகையில்; புலிகள் தலைவர் பிரபாவுடன் தொடர்பு என்கிறார்கள்; இருந்தால் அதில் என்ன தவறு. துப்பாக்கிகளின் சலசலப்பை சங்கீதமாக நினைப்பவன் தி. மு. க. காரன். வாக்குச்சாவடிகள் தந்த தீர்ப்பு அழிக்கப்பட்டு விட்டது என்றும் கூறினர். (சி)

## இன்று இரதோற்சவம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் ரதோற்சவம் இன்று 14ந் திகதி நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இன்று காலை 7.22 மணிக்கு புதுவருடம் பிறக்கும் நேரம் விசேட சங்கிராந்திப் பூசை இடம் பெறும் நாளை 15ம் திகதி திங்கள் காலை 9மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளது.

## பெண்ராணுவத்திற்கிடையில் தகராறு ஏற்படுகிறதாம்!

(மாங்குளம்)

வவுனியா தடைமுகாமிலுள்ள பெண் இராணுவத்தினருக்குள் தமிழ்ப் பெண்களும்இருப்பதாகவும் இவர்கள் தமிழில் சரளமாகப் பேசுவதாகவும் அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர்.

சோதனைச் சாவடிகளில் பயணிகள்மீது சோதனைகள் நடைபெறும் வேளையில் சிங்களஇராணுவப் பெண்களுக்கும் இவர்களுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள், கைகலப்புகள், தகராறுகள் இடையிடை ஏற்படுவதாகவும் தெரியவருகிறது. (150)

## வவுனியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தினர் மீது விடுதலைப புலிகள் அருள் 89 தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வி)

## ஷெல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலினால் வல்லை நெசவுசாலை உட்பட பல பகுதிகள் சேதமடைந்துள்ளன. இப்பகுதியில் வெடிக்காதநிலையில் பல ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன. (க-வி)

## மட்டக்களப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்துக்கு உதவியாக ஹெலியும், பலத்த தாக்குதலில் ஈடுபட்டிருந்தது.

## விமானத்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நிறுத்தப்படுமென பத்திரிகைகளில் வந்த செய்தியில் உண்மையில்லை என்றும் கூறினர்.

யாழ். ஆஸ்பத்திரியில் புலிகள் சிகிச்சை பெற்று வருவதாக தமக்கு கிடைத்த தகவல்கள் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் ஜெனரல் கூறினர். [சி]

## முகாம்களிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணித்திருந்ததாம்.

பலாலிக்கு விசேட விமானத்தில் வந்த திரு. சர்மா மேற்படி ஜெனரேட்டர்களையும், பலாலி காங்கேசன்துறை மின் இணைப்புகளையும் பார்வையிட்ட பின் இவை அனைத்திலும் உள்ள சிறு திருத்த வேலைகளுக்கு வேண்டிய உதிரிப் பாகங்களை கப்பல் மூலம் கொழும்பிலிருந்து உடனடியாக் கொண்டு வந்து மின் இணைப்புகளையும், ஜெனரேட்டர்களையும் திருத்தம் செய்து விடலாம்.

இவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட ஜெனரேட்டர்களை இயங்க வைப்பதற்கு ஒரு மெகவாட் மின்சாரம் வேண்டும் அதை வழங்குவதற்கு சுன்னாகம் மின்நிலையத்தினால் தான் முடியும் ஆகவே உடனடியாக சுன்னாகம் மின்சார நிலையத்தை இயங்க வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்'' என்று திரு சர்மா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளாராம். [வி]

## வவுனியா மன்னார்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தப்பட்ட குண்டுவீச்சினால் ஒருலொறி தீப்பிடித்தும் மற்றொரு லொறி முற்றாக சேதமடைந்த நிலையிலும்உள்ளது.

இதேவேளையில் கிளிநொச்சி வவுனியாப் பகுதியிலும் விமானத் தாக்குதல்கள் பரவலாக இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில ஒரு வயோதிபர் படுகாயமடைந்துள்ளார். 5 வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

வவுனியா, கனகராயன்குளப் பகுதியில் நடைபெற்ற குண்டுவீச்சு தாக்குதலில் இருபொதுமக்கள் (கணவன் மனைவி) படுகாயமடைந்துள்ளனர். 5 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. [க-வி-56]

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வேளையிலும் மீண்டும் பாரிய மோதல்கள் இடம்பெறலாமென்றும் இதற்காக இருதரப்பும் முழு ஆயத்த நிலையிலிருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## வீரமரணமடைந்த புலிகள்

9-ம் திகதி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் பெயர் விபரம் வருமாறு:

கப்டன் வசந்தன், லெப். இன்பராஜ், லெப். சத்தி, சுகந்தன், ஆதித்தன். புஷ்பராஜ், பத்மன், கண்ணன், சுதாகன், அருள், மைனு, சுதாகரன். றுக்மன், கைலன், அசோக், அல்பேட், ராஜேந்திரன், மனோ, தாஸ், திலகன், விதுலன், திசன் ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

2ம் நாள் நடைபெற்ற மோதல்களில் வீர மரணமடைந்த 12 வீரவேங்கைகளின் விபரம் வருமாறு:

கப்டன் சங்கர், கப்டன் அமுதன், லெப். தோமஸ். 2வது லெப். பாப்பா, 2வது லெப். மாலி, கிரி, அமல்ராஜ், செல்வறூபன். மதிமால், நெடுமாறன், றூவ். ஜெகவிந்தன் ஆகிய வீரவேங்கைகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (வி)


## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

இலங்கை கல்வி நிர்வாகசேவை வகுப்பு III போட்டிப் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கான பயிற்சி வகுப்புகள்.

இடம்: யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

காலம்: ஏப்ரல் 1991 - 16, 17, 18, 19, 20 திகதிகளில் தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 1.30 மணி வரை.

கல்வித் திணைக்கள அதிகாரிகள் பிரபல கல்லூரி அதிபர்கள் கருத்துரை வழங்குவர். விடய ஆய்வு, கிரகித்தல் பொதுஉளச்சார்புக்கான பாடக்குறிப்புகளும், வினாத்தாள்களும் வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையில் தோற்றவிருக்கும் அதிபர், ஆசிரியர்கள் பங்குபற்றி பயன்பெறவும்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
தலைமைப் பணிமனை,
442, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
14-04-1991. (சி 4644)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/163?66/31.